DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.109/2025**

Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Manisha | Caste | : | |
| Husband Name | : | Anand Kumar | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 27 |
| Time | : | | | | |

**(A1, A2 present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **17.06.2026**

**17.06.2026 முதல் விசாரணை** :

நான் தற்போது கிளிஞ்சடாவில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊர் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள். நான் எதிரிகளுடன் சமாதானமாக செல்கிறேன். எதிரிகளை விடுதலை செய்வதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. என்னை எதிரிகளுடன் சமாதானமாக செல்வதற்கு என்னை யாரும் கட்டாயப்படுத்தவில்லை. கடந்த 28.06.2026 ம் தேதி மைாலை 05.00 மணிக்கு எங்கள் ஊர் அரசு நியாய விலை கடைக்கு நான் சென்ற போது அங்கு கூட்டமாக இருந்த ஆட்கள் பொருட்கள் வாங்குவதற்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டு அதிலிருந்த 2, 3 நபர்கள் என்னை அசிங்கமாக பேசி எனது முதுகில் கையால் அடித்து மிரட்டி சென்றார்கள். கூட்டமாக இருந்ததால் எனக்கு அந்த நபர்கள் யார் என்று அடையாளம் தெரியவில்லை. இது சம்பந்தமாக நான் கொலக்கொம்பை காவல் நிலையம் சென்று ஒரு புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரில் என்ன எழுதியுள்ளது என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. (**புகார் மனுவிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)**

போலீசார் விசாரணையில் கடந்த 28.06.2025 ம் தேதியன்று மாலை 05.00 மணிக்கு நான் எங்கள் ஊர் அரசு நியாய விலை கடைக்கு பொருட்கள் வாங்க சென்ற போது அங்கு வரிசையில் நின்றுகொண்டிருந்த இவ்வழக்கின் எதிரிகள் என்னை அசிங்கமாக பேசி எதிரிகள் இருவரும் என்னை கையால் முதுகில் அடித்து காயப்படுத்தி கல்லால் அடித்து கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள் என்றும், இது சம்பந்தமாக கொலக்கொம்பை காவல் நிலையத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு கொடுத்ததாக போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக செல்வதால் அடையாளம் தெரியாத நபர்கள் என்னை தாக்கியதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** – இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.